முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S. No. 335/2016

தேதி : 25-03-2024

(வா.சா.2) – ராணி

சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை :

நானும், 1-ம் வாதியும் நெருங்கிய நண்பர்கள் என்றால் சரிதான். 1-ம் வாதி அழைத்ததன்பேரில் சாட்சியம் அளிக்க வந்தேன். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் 1-ம் வாதி சொல்லிதான் எனக்கு தெரியும். வழக்குச் சொத்துக்களில் எத்தனை சொத்துக்கள் உள்ளன என்று எனக்கு தெரியாது. நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி பின்புறம் உள்ள சொத்து சம்பந்தமாக இந்த வழக்கு நடக்கிறது. வழக்குச் சொத்துக்களை பொறுத்து வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே என்ன விவகாரம் நடந்து வருகிறது என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் தற்போது பழனி டவுண், தேவாங்கர் தெருவில் வசிக்கிறேன். நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி பின்புறம் உள்ள சொத்து சம்பந்தமாக வாதிகளை பிரதிவாதிகள் மோசடி செய்துவிட்டார்கள். நான் தற்போது குடியிருந்து வரும் முகவரிக்கான ஆதார் அட்டை தாக்கல் செய்யவில்லை. எனக்கு வழக்குச் சொத்துக்கள் பற்றிய விபரமோ, வாதிகள், பிரதிவாதிகள் விபரமோ எதுவும் தெரியாது என்றும், 1-ம் வாதி அழைத்ததன்பேரில் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2024.03.25 16:50:44 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.